# அகில இந்திய
# தொழிற்சங்க காங்கிரஸ்
## சென்னையில் 18-1-45 முதல் 25-1-45 வரை நடைபெறும்

சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு ருஷ்யாவில் சோவியத் அரசாங்கம் தோன்றியவுடன் உலகில் எங்கும் வீசிய புயல் இந்தியாவிலும் எழுந்தது. தேசிய இயக்கம் துள்ளி எழுந்தது. அதே அலைமோதலில், தொழிலாளர் இயக்கமும் ஜனித்து வளர ஆரம்பித்தது. இந்தப் புதிய சகாப்தத்தில்தான் 1919-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ந் தேதியன்று அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸும் தோன்றியது.

### தேசவிடுதலை இயக்கத்தின் பகுதி

தேசீய இயக்கத்தின் முன்னணியில் நின்ற பல தேசபக்தர்கள் தொழிற் சங்க இயக்கத்தின் அவசியத்தை உணர்[illegible] தேச விடுதலை இயக்கத்தின் ஒரு பகுதியே தொழிலாளர் இயக்கம் என்ற போதம் அவர்களுக்கு ஏற்ப[illegible]னால்தான், தேசீயத் தலைவர்களில் பலர், தொழிற் சங்க காங்கிரஸின் தலைவர்களாகவும் வீற்றிருந்திருக்கின்றனர். முதல் காங்கிரஸுக்கு, பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராய் தலைவராயிருந்தார். தேசபக்த சித்தரஞ்சன்தாஸ் ஒரு முறை தலைவராயிருந்தார். பண்டித ஜவஹர்லால் நேரு இரு முறை தலைவராயிருந்தார். தோழர் வி. வி. கிரி, 1942-ல் தொழிற்சங்க காங்கிரஸின் தலைவராயிருந்தார். நம் தலைவரை அரசாங்கம் சிறையில் வைத்து வைத்திருப்பதை சென்ற வருஷம் கூடிய மகாநாடு கண்டித்ததோடு, அவரை காங்கிரஸின் காரியக் கமிட்டி அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தது.

பண்டித ஜவஹர்லால் நேரு தன்னுடைய சுய சரிதத்தில், இந்தியத் தொழிற்சங்க இயக்கத்தின் "தாதா" என்று அழைத்த தோழர் என். எம். ஜோஷி, நமது ஸ்தாபனத்தின் பொதுக் காரியதரிசியாயிருக்கிறார்.

இன்று தோழர் டாங்கே, அதன் தலைவராயிருக்கிறார். உலகப் பிரசித்தமான பம்பாய் பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஏகப்பிரதிநிதி ஸ்தாபனமாகிய கிர்னி காம்கார் யூனியனை ஸ்தாபித்தவர்களுள் ஒருவர். 1927-ல் 1,40,000 பஞ்சாலைத் தொழிலாளர்கள் பம்பாய் நகரத்தில் செய்த 8 மாதகால வேலை நிறுத்தம், உலகப் பிரசித்தமானது. அந்த வேலை நிறுத்தத்தில் பிரதான பங்கெடுத்துக் கொண்டவர் தோழர் டாங்கே. வளர்ந்து வரும் தொழிலாளர் இயக்கத்தை நசுக்குவதற்காக அதிகார வர்க்கம் [illegible], பம்பாய், கான்பூர், மீரத் சதிவழக்குகளில் பல வருஷங்கள் சிறைத் தண்டனையை அநுபவித்தார். இன்று பிரிட்டனில், இந்திய தேசீய இயக்கத்திற்கும், தேசீயத் தலைவர்களுக்கும் எதிராக அமெரிக்க கும்பல் செய்துவரும் பிரசாரத்திற்கு ஆப்பு அடித்தாற்போல், பிரிட்டிஷ் மக்களிடையே பதில் கூறி வருகிறார் நம் தலைவர் டாங்கே.

### 25 வருட காலத்தில்

கடந்த 25 வருஷங்களாக, நமது ஸ்தாபனம் வளர்ந்து வந்திருக்கிறது. இன்று, இந்தியா பூராவும் 300-க்கு மேற்பட்ட தொழிற் சங்கங்களின் இணைப்பைக் கொண்ட ஸ்தாபனம். பலவிதச் சோதனைகளிலே வெற்றி பெற்று, சிலசில சமயங்களில் ஏற்பட்ட பிளவுகளை செப்பனிட்டு, வளர்ந்துள்ள ஸ்தாபனம், தொழிற்சங்க இயக்கத்தின் வளர்ச்சிக்கேற்றவாறு, நம் பலத்தைக் கொண்டு, தொழிலாளி மக்களுக்குப் பலவித சட்ட பூர்வமான உரிமைகளும் கிடைத்துள்ளன.

தொழிற்சங்க காங்கிரஸின் கிளர்ச்சியின் விளைவாகவே, இன்று தொழிலாளி மக்களுக்கு சிற்சில உரிமைகள் கிடைத்துள்ளன. பாக்டரிச் சட்டம், மாணவ சகாயச்சட்டம், விபத்து ஏற்பட்டால் நஷ்டஈடு, சம்பளப் பட்டுவாடா மசோதா, ஆகியவைகளெல்லாம் தொழிற்சங்க இயக்கத்தின் கிளர்ச்சிதான் காரணம்.

இன்று, பொருளாதாரச் சீர்கேடு ஏற்பட்டு, நிலக்கரிப் பஞ்சத்தினால் திடீர் திடீரென்று தொழிற்சாலைகளை மூடும் காலத்தில், தொழிலாளிகளுக்கு ஓய்வு சம்பளமும் பஞ்சப்படியும் கொடுக்கும் முறையும் தொழிற்சங்க காங்கிரஸின் முயற்சியினாலேயே.

உணவு நெருக்கடி தேசம் பூராவிலும் அதிகரித்துவரும் காலத்தில், 'ரேஷனிங்' முறைக்காகக் கிளர்ச்சி செய்தது நமது ஸ்தாபனம். அதன் கிளர்ச்சியினாலேயே அரசாங்கமும், தொழிலாளிகளுக்கு உணவு தானியங்களை விநியோகிக்கவேண்டிய அவசியத்தையும் ஏற்றுக்கொண்டது.

தொழிற்சங்க காங்கிரஸின் ஜெனரல் கவுன்ஸில் சென்றமாதம் 29ம் தேதி டில்லியில் கூடிற்று.

## சென்னையில் வெள்ளிவிழா

இந்தக் கூட்டம், நம் மாகாணத்திற்கும், குறிப்பாக தமிழ்நாட்டிற்கும் விசேஷமான முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், நம் ஸ்தாபனத்தின் வெள்ளிவிழா மகாநாட்டை சென்னை நகரத்தில் கூட்டவேண்டுமென்ற அழைப்பை இந்தக் கூட்டம் ஏற்றுக்கொண்டுள்ளது. நமது மாகாணத் தொழிற்சங்க இயக்கத்திற்கே மிகப் பெரிய கவுரவமாகும் இது.

மகாநாடு, **1945** ஜனவரி **18**-ந் தேதியிலிருந்து **25**-ந் தேதி வரையில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொழிற் சங்க இயக்கத்தின் முன்னே பல சிக்கலான பெரிய பிரச்சினைகள் இருக்கின்றன அல்லவா? யுத்தத்திற்குப் பிற்காலத்திய நிலைமை, இன்றுள்ள பொருளாதாரக் கஷ்டங்கள், பஞ்சப்படி மறுக்கப்படுவது, நிலக்கரிப் பஞ்சம் இவைகளை யெல்லாம் நன்கு பரிசீலனை செய்ய ஒரு வாரம் அவசியமல்லவா?

நம் மாகாணத் தொழிற் சங்க இயக்கம் மகத்தான பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. 300 சங்கங்களின் பிரதிநிதிகளை இந்தியா பூராவிலிருந்தும் வரவேற்று, மகாநாட்டை நடத்தும் பொறுப்பை அது ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்த வருஷத்திய மகாநாட்டின் விளைவாக, நமது மாகாணத்தின் தொழிற் சங்க இயக்கத்திற்கே, புதிய ஊக்கமும், உற்சாகமும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. நம் மாகாணத்தின் தொழிற்சங்க இயக்கத்தின் ஸ்தாபகர்களுள் ஒருவரும், நீண்டகால தொழிற்சங்க இயக்க அனுபவமும் வாய்ந்த தோழர் வி. சக்கரை செட்டியாரின் தலைமையில் வரவேற்புக் கமிட்டி நிறுவப்பட்டுள்ளது. வெளியிலிருந்து வரும் நமது சகோதரப் பிரதிநிதிகளுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில், சகலவித ஏற்பாடுகளையும் செய்ய தமிழ் நாட்டுத் தொழிலாளிகள் திரண்டு வருவார்களாக.

ஒவ்வொரு தொழிலாளியையும், பண உதவி செய்வதற்கு முன் வருமாறு கோருகிறோம். மகாநாட்டை சிறப்பாக நடத்தத் தொண்டர்களாக முன் வருமாறு சென்னைத் தொழிலாளி மக்களைக் கோருகிறோம்.

**K. பாலசந்திர மேனன்,**
காரியதரிசி.

**V. சக்கரை செட்டியார்,**
தலைவர்.

**வரவேற்புக் கமிட்டி.**

ஜனசக்தி பிரஸ், சென்னை.

# THE ALL INDIA TRADE UNION CONGRESS

## 21ST SESSION

## RECEPTION COMMITTEE

Dear comrade,

From the letters that have been pouring in, we find that a very large number of workers from all the working class centres are intending to attend the forthcoming 21st session of the A.I.T.U.C. This is a very welcome thing, and is a good pointer to indicating the hold of the A. I. T. U. C. over the workers of the Province, and the tremendous loyalty our working class has for the A. I. T. U. C.

But comrades must remember that we are conducting the Conference in the midst of a war. There is the strain on the transport and the working class should not add to the strain.

Secondly there are no open spaces available in Madras, where we could have built a number of Camps and created a Trade Union Congressnagar. Hence, delegates have to be accommodated in buildings. The housing problem in the city is very accute. The conference is being held at a time when high schools and colleges are working. We cannot therefore get any school or hostel for housing the delegates.

Furthermore, these are days of rationing of both rice and firewood. Comrades will also understand that the All-India Trade Union Congress is meeting at a time when the T. U. movement is faced with grave problems. The conference will be therefore devoted to serious

deliberations and the main part of the conference will be the delegates session. The meetings of the delegates session will be held in a hall and not in the open air. Apart from these meetings, there will be two rallies of workers on the 20th and 21st evenings, when leaders will address the workers.

Taking all these things into account, the Reception committee will not be able to allow more than **400 Visitors** in the hall. It has therefore been decided not to allow more than 3 visitors from each affiliated and associate union. All affiliated unions must, ofcourse, send their full quota of delegates. Visitors must bring with them their authorisation from the secretary of their respective unions. **Authorised Visitors will alone be provided** with boarding and lodging by the Reception Committee at the rate of Re. 1 per day. They will have to pay in addition a visitors' fee of Rs. 2 for the whole session.

## MEETINGS OF THE SESSION

On the 18th & 19th, there will be meetings of the General Council, the Resolution Committee, the credentials committee and other committees. The delegates Session begins on the 20th only and continues till the 22nd.

Delegates and visitors need not come to Madras before the evening of the 19th instant. Members of the General Council and of the various sub-committees, will ofcourse, reach Madras on the 17th or earlier.

**V. Chakkarai Chettiar,**

President, Reception Committee.

Janasakthi Press, Madras

*Circular* 10-1-45.

## AFFILIATION TO A. I. T. U. C.

All affiliated and associate unions must pay up their affiliation fee immediately.

Unions which have not paid their M.P.T.U.C. affiliation fee will not be entitled to participate in the A.I.T.U.C. Conference.

Unions seeking associate membership must pay Rs. 5 as associate fee.

Kindly inform this offie.

What collections you have made for the A.I.T.U.C. conference?

Give the numbers of the ticket books you have received from the office.

What are the numbers of the books you have sold? What remain unsold? Please send the money you have collected and send back the ticket books which remain unsold?

Many Unions have yet to fill up questionaire sent from this Office. Please fill it up soon. If any union has not received the questionaire, kindly inform.

12, Sarafali House,
Broadway,
G. T., Madras.

P. BALACHANDRAN,
Secretary, M. P. T. U. C.

Janasakthi Press, Madras.